ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2481/27 - 2026 මාර්තු මස 27 වැනි සිකුරාදා - 2026.03.27

*2481/27 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டம்**

1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரிவு 36(1) இன் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களின் அனுமதியுடன், வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க அவர்களினால் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**வசந்த சமரசிங்க,**
வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு
மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு 03,
2026, மாச்சு 19.

**ஒழுங்குவிதிகள்**

1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு, 1988 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதிய 508/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதிய 2055/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் இறுதியாக திருத்தப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டவாறு உடன் அமுலுக்கு வரும் வகையில் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றன.

**இரண்டாம் அட்டவணை**

| | *செலுத்த வேண்டிய கட்டணம் (VAT நீங்கலாக)* |
|---|---|
| 1. ஒப்பந்ததாரரை அல்லது ஏதேனும் இணைந்த நிறுவனங்களை, துணை - இணைந்த நிறுவனங்களை, முகவரை அல்லது ஒப்பந்ததாரருக்காக அல்லது அவர் சார்பாக செயற்படுவதற்காக பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் | ரூபா 2,300.00 |
| 2. பொது ஒப்பந்தங்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் | ரூபா 11,500.00 |
| 3. பதிவினை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் | ரூபா 2,300.00 |
| 4. பொது ஒப்பந்தமொன்றை மீள் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் | ரூபா 11,500.00 |

EOG 03 - 0228

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது